MADURAI SEED

மதுரை சீடு குழந்தைகள் பேரவை வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

உலகு 4 | பணிமடல் 16 | ஜுன் - ஜுலை 2010 | நன்கொடை ரூ. 2

★ பிறப்பு தரித்திரமாக இருந்தாலும்
இறப்பு சரித்திரமாக இருக்கட்டும்.

★ பெயர் ஆசை வேண்டும் ஆனால் பேராசை கூடாது

★ பிரச்சனையா, அப்பிரச்சனைக்கு எப்படியாகிலும் தீர்வு உண்டு

★ தோல்வியை கேள்வி கேட்க கற்றுக்கொள்
வாழ்க்கையை வெற்றி கொள்வாய்

★ கஷ்டப்படாமல் இருக்க கஷ்டப்படு.

★ விரும்பி சுவைத்தால் வேப்பங்காயும் இனிக்கும்.
விரும்பாமல் சுவைத்தால் தேனும் கசக்கும்.

★ பெற்றோர்களின் கஷ்டங்களை புரிந்தவன் தான் வெற்றி பெற முடியும்.

★ ஆசைப்பட்டால் தான் வெற்றி கிடைக்கும்.

★ காலை மாலை நடந்து நல்ல காற்றை சுவாசிப்பவனை காலனும்
கையெடுத்து வணங்குவான்

★ கஷ்டப்பட்டு படிக்காதே இஷ்டப்பட்டு படி

★ வெற்றியின் படிக்கட்டுகளை கட்டியவர்கள்
தோல்வியை பலமுறை முத்தமிட்டவர்கள்

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை
குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது

★ சாதனையாளர் புதிதாக எதையும் செய்யவில்லை
பிறர் செய்ததையே புதிதாக மாற்றிச் செய்தார்கள்

★ சாதிக்க துடித்தால் சஹாராவில் கூட சந்தன மரம் வளரும்

★ முயன்றால் முள்ளின் நுனியில் கூட முத்திரைப் பதிக்கலாம்.

★ மில்லி வினாடியின் மதிப்பை ஓட்டப்பந்தயத்தில் பதக்கம் பெற்றவனிடம் கேள்

ஒரு வினாடியின் மதிப்பை விபத்தில் உயிர் தப்பியவனிடம் கேள்.

ஒரு நிமிடத்தின் மதிப்பை இரயிலை தவற விட்டவனிடம் கேள்.

ஒரு மணி நேரத்தின் மதிப்பை நண்பனுக்காக காத்திருப்பவனிடம் கேள்.

ஒரு நாளின் மதிப்பை அன்று வேலை கிடைக்கமால் இருக்கும் ஒரு தினக் கூலியிடம் கேள்.

ஒரு மாதத்தின் மதிப்பை குறை பிரசவம் ஆகக்கூடாது என்கிற தாயிடம் கேள்.

ஒரு வாரத்தின் மதிப்பை வார பத்திரிக்கை ஆசிரியரிடம் கேள்.


ஒரு வருடத்தின் மதிப்பை பள்ளி படிப்பை தவறவிட்ட மாணவனிடம் கேள்.

**மதுரை சீடு இளைஞர்களுக்காக நடத்திய கருத்தரங்கில்
கருத்தாளர், T.V.S. பள்ளி தமிழ் ஆசிரியர் கதிரவன் விதைத்தவை**

இதழ் வெளியீட்டுக் குழு
V.திவ்யபாரதி (XII), A.சர்மிளா (IX) D.விக்னேஷ்வரன்(VIII), A.ராமகிருஷ்ணன் (VII)
C.அருண்குமார் (தொண்டர் பொறுப்பாளர்)


குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்
Dr.மெல்லியல் அண்ணாமலை, சென்னை ஆஷா குழுவினர்
திருமிகு.வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி, திருமிகு. க.அன்பரசன்
மு.மன்சூர்அலி மதுரை சீடு நிர்வாகக் குழு

தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்
மதுரை சீடு
அர்ஜுன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.
பேசி : 9894805446, 94425 37670, 0452-2537670
மின்னஞ்சல் : maduraiseed1999@gmail.com
வலைதளம் : www.ashanet.org # seednarpanigal
www.madurai-seed.org




தம்பி, தங்கைகளே..!
இங்கே
கொடுக்கப்பட்டுள்ள
மயிலின் படத்தை
படிப்படியாக
வரைந்து
வண்ணம்
தீட்டுங்கள்!

# வரையலாம் வாங்க!



## எனர்ஜி கஞ்சி!

**தேவையானவை:**

கேழ்வரகு மாவு, பொட்டுக்கடலை மாவு, தலா ஒரு கப் - தலா 75கி, புழுங்கலரிசி (அ) கோதுமை வறுத்து உடைத்த ரவை - அரை கப் - 75கி, பால் - 300 மில்லி பனங்கற்கண்டு அல்லது சர்க்கரை - 30கி. தேவையான அளவு, ஏலப்பொடி- அரை டீஸ்பூன்

**செய்முறை:**

அடுப்பில் அடி கனமான ஒரு பாத்திரத்தில் 2 கப் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து, புழுங்கலரிசி ரவையை அல்லது கோதுமை ரவையை அதில் போட்டு நன்றாக குழைய வேகவிடவும், இரண்டு மாவுகளையும் சிறிதளவு பாலிலோ அல்லது தண்ணீரிலோ கரைத்து வெந்த அரிசி ரவையில் அல்லது கோதுமை ரவையில் கொட்டி 5 நிமிடம் கிளறி எடுக்கவும் ஏலத்தூள் சேர்க்கவும். தேவையான இனிப்பு + பாலை சேர்த்துப் பருகவும். ரொம்பவும் சத்து மிகுந்தது இந்த அரிசி கஞ்சி.

**கிடைக்கும் சத்துகள்:**

கார்போஹைட்ரேட் - 196 கிராம்
ப்ரோட்டீன் - 37 கிராம்
கொழுப்பு - 17.5 கிராம்
ஆற்றல் - 1099 கிலோ கலோரி
கால்சியம் - 777 மில்லி கிராம்
இரும்பு - 11.35 மில்லி கிராம்
பீட்டா கரோட்டின் 762 மைக்ரோ கிராம்
ஃபோலிக் ஆசிட் -151 மைக்ரோ கிராம்
கொலின் - 46 கிராம்

**டயட்டீஷியன் கமெண்ட்ஸ்:**

உடலுக்குத் தேவையான ப்ரோட்டீன், நல்ல கொழுப்பு ஆற்றல், கால்சியம், இரும்புச் சத்து எல்லாம் கிடைக்கிது. ஏலக்காயால் கொலினும் கிடைக்கிறது. சமச்சீரான உணவு. கொஞ்சம் குண்டான சுட்டிகளுக்கு இனிப்பைக் குறைத்து கொழுப்பு நீக்கப்பட்ட பால் சேர்த்துக் கொள்ளலாம். காலையும், மாலையும் அருந்தலாம்.

## சுவையோ சுவை

## நகைச்சுவை

ஆசிரியர் : வாய்மை என்றால் என்ன ?
மாணவன்: வாய்மை என்றால் 'லிப்ஸ்டிக்' சார்!

✾

ஆசிரியர் : டேய் ரவி, ஏண்டா ரவி நேத்து சீக்கிரமா வீட்டுக்கு போயிட்டே
ரவி: நீங்க தானே சார் மணி அடிச்சவுடனே வீட்டுக்கு போகலாம்னு சொன்னீங்க!!
ஆசிரியர் : ஆமாம் அதுக்கு என்ன?
ரவி: என் பக்கத்தில் இருந்த மணி என்னை அடிச்சவுடனே நான் வீட்டுக்கு போயிட்டேன்

✾

ஆசிரியர்: "ஜ" க்கு ஸ்பெல்லிங் சொல்லு
மாணவன்: சிங்கின் ஜ யா? கப் ஜயா ஜச்சர்?

✾

ஆசிரியர்: நூத்துக்கு நூறு மார்க் எப்படிடா எடுத்தே?
மாணவன்: ஒரு நல்ல டீச்சர் கிட்ட டியூசன் போனேன் சார்!

✾

ஆசிரியர்: ஒரு அறையின் நீளம் 30 அடி அகலம் 20 அடி பெருக்கினால் என்ன வரும்?
மாணவன்: குப்பை

✾

ஆசிரியர்: "சிக்கனமே சிறப்பு" என்ற போட்டிக்கு ரெண்டு பக்க கட்டுரை எழுதச் சொன்னதுக்கு எட்டே வரிகளில் எழுதித் கொடுத்திருக்கியே ஏன்?
மாணவன் : "சிக்கனமே ஜெயிக்கும்"ங்கிற நம்பிக்கையில் தான் சார்.

✾

ஆசிரியர்: பரீட்சைக்கு ஒரு வாரம் தான் இருக்கு படிக்காம எப்பப்பாரு விளையாடிட்டே இருக்கியே!
மாணவன்: விளையாடினா மனஅழுத்தம் குறையும்னு நீங்கதானே சார் சொன்னீங்க

தொகுப்பு:
V.திவ்யபாரதி
மற்றும்
12ஆம் வகுப்புமாணவிகள்

## ஒளி இருக்கும் இடத்திற்கு இருள் வருவதில்லை!

இருட்டு ஒரு முறை கடவுளிடம் சென்று புகார் செய்தது. கடவுளே, இந்த சூரியன் எப்போதும் என்னிடம் வம்பு செய்து கொண்டேயிருக்கிறது. நான் எங்கு சென்றாலும் என்னைத் துரத்திக்கொண்டே வருகிறது. சூரியனால் நான் மிகவும் தொல்லைப்பட்டு விட்டேன். பொழுது விடிந்தால் அது என்னைக் கட்டிப்போட்டு விடுகிறது. மாலை நேரம் வரும் போது மிகவும் சிரமப்பட்டுதான் நான் அதனிடமிருந்து விடு பட வேண்டியிருக்கிறது. நான் என்ன தவறு செய்தேன். ஏன் சூரியன் என்னிடம் பகைமை பாராட்டுகிறது. என்னைத் துன்புறுத்துவதற்காக அது இரவு பகலாகச் சுற்றி வருகிறது. அதனிடமிருந்து தப்பிப்பதற்கு வழியே இல்லையா. சூரியனிடம் கொஞ்சம் எடுத்து சொல்லி கண்டித்து வையுங்கள்.

கடவுள் சூரியனை வரவழைத்துச் சொன்னார், "நீ ஏன் இருட்டைத் தொல்லை செய்கிறாய். இருட்டு உனக்கு என்ன கெடுதல் செய்தது. எதுவானாலும் என்னிடம் சொல்".

சூரியன் சொன்னது: "என்ன இருட்டா? பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நான் உலகம் முழுவதையும் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். இதுவரை நான் இருட்டைப் பார்த்ததே இல்லையே. இருட்டைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாதே! எங்கே இருட்டு அதை என் முன்னால் வரச் சொல்லுங்கள். நான் ஏதும் குற்றம் புரிந்திருந்தால் அதனிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலாவது நான் அதைப் பார்த்து விடுகிறேன்.

சரியென்று கடவுள் இருட்டை அழைத்தார். ஆனால் இருட்டால் ஒளியிருக்கும் இடத்திற்கு வரமுடியவில்லை எப்படி வர முடியும். ஒளியே இருட்டைத் தேடிச் சென்றாலும் இருட்டு மிக மிகத் தொலைவாக ஓடிச் சென்றது.

ஒளி என்பது உண்மை. ஒளி என்பது அறிவு. ஒளிதான் அன்பும், திறமையும். இவற்றைத் தன்னிடம் கொண்டிருக்கும் எவரையும் உலகின் எந்த சக்தியும் தோற்கடிக்க முடியாது.


## பின்கோடு

இந்தியாவில் எல்லா அஞ்சலகங்களுக்கும் ஒவ்வொரு பின் கோடு நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு அஞ்சலகத்திற்கு கொடுத்த எண் வேறொரு அஞ்சலகத்திற்கு வழங்கப்படவில்லை. அதனால் கடிதத்தில் பின்கோடு எண்ணைச் சரியாக எழுதும் பட்சத்தில் அதை எந்த அஞ்சலகத்திற்கு அனுப்ப வேண்டுமென்று சரியாகத் தெரிந்து கொள்ள முடியும். போஸ்ட் இன்டெக்ஸ் நம்பர் என்பதன் சுருக்கம் தான் **PIN**. பின்கோட்டில் 6 எண்கள் இருக்கும். அதில் முதலாவது எழுத்து மண்டலத்தைக் குறிக்கிறது. இந்தியாவில் எந்த மண்டலத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெரியும். இந்தியாவை எட்டு மண்டலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். உதாரணமாக தமிழ்நாடு, கேரளம், லட்சத்தீவு, ஆகிய பிரதேசங்கள் அடங்குகிற மண்டலத்தின் எண் 6 ஆகும். இந்த எண்தான் இடது மூலையில் வரும். அது போன்று ஜம்மு, பஞ்சாப் பகுதிகளுக்கு 1 என்பது தான் மண்டல எண். அதனால் அங்குள்ள அஞ்சலகங்களின் பின்கோடு 1ல் தொடங்கும், தில்லியும் இந்த மண்டலத்திற்கு உட்பட்டது தான். பின் கோட்டின் முதல் மூன்றெழுத்தைக் கொண்டு கடிதத்தை இனம்பிரிக்கின்ற மையத்தைத் தெரிந்து கொள்ளலாம். மிச்சமிருக்கும் கடைசி மூன்றெழுத்தைக் கொண்டு எந்த அஞ்சலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதைச் சரியாக அறிந்து கொள்ளலாம். சுருக்கமாக மிகவும் அறிவியல் முறையில் ஒரு அஞ்சலகத்தைத் தெரிந்து கொள்ள பயன்படுத்துகிற எண்தான் பின்கோடு. அது ஒரு கடிதத்தை சரியான அஞ்சலகத்தில் சேர்க்க பெரிதும் உதவுகிறது. அந்த அஞ்சலகத்திலிருந்து அது குறிப்பிட்ட முகவரியை அடைந்து விடுகிறது. பின்கோட்டைத் தவிர மிச்சமிருக்கும் முகவரியை எந்த மொழியில் எழுதினாலும் பிரச்னையில்லை. உதாரணமாக தில்லியிருந்து தமிழ்நாட்டிற்கு அனுப்புகின்ற கடிதத்தில் தமிழிலேயே முகவரி எழுதலாம். ஆனால் பின்கோடு சரியாக இருக்க வேண்டும். அந்த கடிதம் தமிழ்நாட்டு அஞ்சல் பிரிப்பகத்தை அடைந்துவிட்டால் அவர்கள் அதை சரியான முகவரியில் சேர்த்துவிடுவார்கள்.

ஆசிரியர் குழு

## உயரமான மரங்களில் தண்ணீர் மேலே செல்வது எப்படி?

பூமியில் புவிஈர்ப்பு விசை தான் முக்கியம். அதை மீறி அணுவும் அசையாது. புவிஈர்ப்பு விசை தான் அனைத்தையும் கட்டுப்படுத்துகிறது. ஆனால் தாவரங்கள் புவிஈர்ப்பு விசையை எதிர்த்து மேல் நோக்கி வளர்கின்றனவே! மேலும் மோட்டார் வைக்காமலேயே மரத்தின் அவ்வளவு உயரத்திற்குத் தண்ணீர் ஏறுகிறதே. அது எப்படி? மரங்கள் மற்றும் தாவரங்களில் உள்ள வேர் முடிச்சுகளில் சர்க்கரைக் கரைசலும், உப்புப் பொருட்களும் இருக்கும். இதனால் வேர்களின் உள்ளே அழுத்தத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக வெளியே இருக்கும் தண்ணீர் வேருக்குள் செல்கிறது. இதற்கு சவ்வூடு



பரவல் என்று பெயர். இப்படி வேர் முடிச்சுகளில் தண்ணீர் சேர்ந்து கொண்டே இருக்கும். இதனால் அதிகரிக்கும் தண்ணீரின் அழுத்தம் காரணமாக தண்ணீர் மேல் நோக்கி உயரும். அடி மரம் வழியாக கிளை வழியாக இலைகளுக்கு ஒரு செல்லில் இருந்து மற்றொரு செல் வழியாகத் தண்ணீர் எடுத்துச் செல்லப் படுகிறது. அத்துடன் ஊட்டச் சத்துகளும் சென்று சேர்கின்றன. மரங்கள் வளரும் காலத்தில் இலைகள் மூலமாக டன் கணக்கான தண்ணீரை (டன் என்றால் ஆயிரம் கிலோ) வளி மண்டலத்தில் வெளியேற்றுகின்றன. ஆவியாதல் எனும் செயல்பாடு மூலமாக இப்படிப் பல மடங்கு தண்ணீர் வெளியேறுகிறது. இதன் காரணமாக இலைகளில் ஏற்படும் தற்காலிக வெற்றிடத்தை அடியிலிருந்து வேர் வழியாக வரும் தண்ணீர் நிரப்புகிறது. தண்ணீர் மூலக்கூறுகள் எப்போதும் நெருக்கமாகப் பிணைந்து கிடக்கும். ஆவியாதலால் தண்ணீர் மூலக்கூறு வெளியேறும் நிலையில் கீழ்ப் படியிலிருந்து மேல் படிக்கு இழுக்கப்படுவது போல் புதிய தண்ணீர் கீழிருந்து மேலே வருகிறது. இப்படிப் பல அடி தூரம் மேலே ஏறிய தண்ணீர் தான் இள நீராகவும் பத நீராகவும் நம்மை வந்து அடைகின்றன.

எட்டாம் வகுப்பு குழந்தைகள் வேர்கள் அரங்கம்

## அதிசயம்! ஆனால் உண்மை.

- புறாக்கள் இரண்டு முட்டைகளே இடும். பெரும்பாலும் சுத்தமான நீரையே குடிக்கும்
- லயன், ஓமர் என்ற இனப் புறாக்களே பந்தய பிரியர்களால் வளர்க்கப்படுகிறது.
- புறா 100 கி.மீ.வரை ஓய்வெடுக்காமல் பறக்கும்
- புறா போன்ற சிறு பறவைகள் மிகவும் வயதாகி பறக்க முடியாமல் போனால் விசித்திரமான முறையில் தற்கொலை செய்வதுண்டு என்று பறவையியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பறவைகள் தன் உடல் எடையை விட அதிக எடை அளவுள்ள கற்களை விழுங்கி விட்டு மரத்தில் இருந்து கீழே குதித்து தலையில் மோதி உயிரிழக்கின்றனவாம்.
- திமிங்கலத்தின் இதயம் நிமிடத்திற்கு ஒருமுறை தான் துடிக்கிறது.
- திமிங்கலத்திற்கு 20 ஆயிரம் பற்கள் வரை முளைக்கும்
- ஜெல்லி மீன்கள் ஏழு மாதங்கள் வரை உயிர் வாழும்
- பாப்ளர் என்ற பறவை ஏழு ஏழாக பறக்கும்
- நண்டு பக்கவாட்டில் நடக்கும் திறன் கொண்டது
- யானை நடக்கும் போது ஒரு டெசிபல் அளவு கூட சப்தம் கேட்காது. அதன் துதிக்கையில் 1 1/2 காலன் தண்ணீர் வரை வைத்து கொள்ள முடியும்
- யானையின் துதிக்கையின் மட்டும் 40,000 தசைகள் காணப்படுகின்றன. பெரிய மரங்களை வேரோடு சாய்க்கவும். சின்ன ஊசியை எடுக்கவும் தும்பிக்கையால் முடிகிறது.
- பட்டாம்பூச்சிக்கு ஆறு கால்கள் உள்ளன
- பூச்சி இனத்தில் தட்டாம் பூச்சி ஒன்றிற்கு தான் ஒரே இடத்தில் நின்று பறக்கும் ஆற்றல் உண்டு
- இரை தின்னும் போது கண்ணீர் வடிக்கும் உயிரினம் முதலை
- முதலை ஒரு டன் கூட எடையிருக்கும்
- முதலைக்கு 68 பற்கள் உள்ளன.
- முதலையால் இரவிலும் நீருக்கடியில் பார்க்க முடியும்
- முதலையின் விழிகளுக்கு இமைகள் கிடையாது
- முட்டையிடும் காலத்தில் முதலை பூமியை தோண்டி முட்டைகளை இடும்
- சிட்டுக்குருவியின் இதயம் நிமிடத்திற்கு 1,000 முறை துடிக்கும்.
- எறும்பு தன் எடையைப் போல் 50 மடங்கு எடையை இழுக்கும் திறன் கொண்டது.
- ஆமைகளுக்கு பற்களே இல்லாவிட்டாலும் தனது ஈறுகளில் எதனையும் கடித்து துண்டிக்கும் சக்தி உண்டு.

புதுயுகம் இதழ் சார்பாக
A.ஷர்மிளா (IX), D.விக்னேஷ்வரன் (VIII)
உதவி: P.பாண்டியராஜன் ஆசிரியத்தொண்டர்

| உறுப்பு | அணியும் இடம் | அணிகலன் பெயர் | விளக்கம் |
|---|---|---|---|
| கால் | பெருவிரல்<br>2வது விரல்<br>4வது விரல்<br><br>கணுக்கால் | பெருவிரல் முடிச்சி<br>தடை, மிஞ்சி, மெட்டி<br>பீலி,பில்லணை,பதரசம்<br>பாதசரம்<br>தண்டை, குழல் தண்டை,<br>முறுக்குத் தண்டை,<br>தளசுத்தண்டை | பெருவிரலில் அணிவது<br>2வது விரலில் அணிவது<br>4வது விரலில் அணிவது<br>கால்கொலுசு<br>கணுக்காலில்<br>அணியக்கூடியது. |
| கை | | வங்கி<br>நாகவத்து<br>வளவி<br>மோதிரம் | தோளுக்கு கீழாக ஒரு கையில் அணிவது<br>வங்கிக்குக் கீழ் அணிவது<br>வளைல்கள்<br>மோதிரம் |
| இடுப்பு | | ஒட்டியாணம்<br>அரைமூடி<br>அரைச்சலங்கை<br>அரை நாண் கொடி | சிறு பெண் குழந்தைகளுக்கு போடுவது<br>இடுப்பு கீழ் சாங்கிலி<br>இடுப்பு கீழ் சாங்கிலி |
| கழுத்து | | அட்டியல்<br>உள்கழுத்து சாங்கிலி<br>கணட சரம்<br>காசுமாலை<br>கெச்சுப் புரச்சை<br>கெவுடு<br>சரடு சுத்து மணி<br>தாயத்து<br>வெற்றிலைச்சுருட்டு<br>தாலி<br>பதக்கம்<br>புடை தாங்கி | ஆண்கள் அணிவது |
| மூக்கு | | மூக்குத்தி<br>பேசரி<br>புல்லாக்கு<br>தொறட்டி | |
| காது | | பூடி<br>குருத்தட்டு<br>முருகு<br>மாட்டி<br>குணுக்கு<br>தண்டட்டி | மேல்காதில் அணிவது<br>டைமன் வடிவில் காதின்குருத்தட்டில் போடுவது<br>பூடி அணியும் இடத்திற்கு சற்று கீழாக அணிவது<br>காதணியிலிருந்து புறப்படும் மெல்லிய சங்கிலி<br>காது வளையம், கனமானது<br>காது வளர்ந்த பின் அணிவது. |
| தலை | | நெத்திசுட்டி<br>சுத்துப்பிரிஞ்சி<br>உச்சி ராக்கடி<br>கொண்டைத் திருகு<br>ஜடை நாகம்<br>குஞ்சம் | நெத்திச் சுட்டிக்கு இரு பக்கமும் இருப்பது.<br>தலை உச்சியில் வைத்து பின்னுவது<br><br>ஜடை நெடுக கீழே நுனிவரையில் வருவது<br>ஜடையின் கீழ் வைத்து பின்னுவது. |

மதுரை சீடு –இல் நடைபெற்ற பட்டிமன்ற விழாக்களின் ஒருபகுதி

## பள்ளிக்கு செல்வது கற்கண்டே

வாழ்க்கைனா சின்ன சந்தோசம், துக்கம், விளையாட்டு இதெல்லாம் சேர்ந்தது தான் வாழ்க்கை. இவையெல்லாம் எங்க கிடைக்குது? காட்டில கிடைக்குமா இவையெல்லாம் ஒரு இடத்தில கிடைக்குது அது தான் பள்ளிகூடம். இப்ப நீங்க பள்ளி கூடமே செல்லாத வாழ்க்கைய வாழ்ந்து பாத்திருக்கீகங்கனா நீங்க 1/2 வாழ்க்கை தான் வாழ்ந்துருக்கீகங்கனு அர்த்தம். சாதாரண களிமன்னை பார்க்கிறப்போ அருவருப்பா இருக்கும். அதை பார்த்து ஒதுங்குறோம். ஆனா அதே களிமண் குயவன் கிட்ட போச்சுனா சூடு பட்டுச்சுன்னா அப்ப களிமண் இல்லீங்க, அழகிய பயன்பட கூடிய பொருள் மண்பாண்டம் கலையம் என பல பெயர்களால் அழைக்கப்படும். அதே மாதிரி தான் பள்ளி கூடத்துக்கு போகனும். சில கஷ்டங்களை அனுபவிக்கனும். அப்ப தான் அவன் ஒரு மனிதன். ஸ்ரீ தேவி நடிகை இருக்காங்க அவங்க இன்னும் இளமையாக தான் இருக்காங்க. ஆனா இளமை பள்ளி பருவத்தை அவங்க பெற முடியுமா? அவங்க படிக்கலேனு சொல்லவில்லை. இளமையை கூட ப்யூட்டி பார்லரில் வாங்கி கொள்ள முடியும். ஆனால் இளமை பருவ கல்லூரி படிப்பை அந்த சுவையுடன் திரும்ப அனுபவிக்க முடியாது. ப்யூட்டி பார்ல போயி இளமை வாங்குற மாதிரி முதுமையில படிக்க வாய்ப்பிருந்தாலும் அதில் பயன் தனக்குரியதாக இருக்குமே தவிர பிறர்க்குரியதாக இருக்காது.

**A.ராமகிருஷ்ணன் VII**

## பள்ளிக்கு செல்வது கசப்பே

ஒவ்வொருவரிடமும், குழந்தைகளிடமும் கேட்டு பார்த்தால் பள்ளிக்குச் செல்வது கசப்பு என்று தான் சொல்கிறார்கள். ஏன் 5 நாட்கள் (23.6.2010 - 27.6.2010) பள்ளி செல்ல வேண்டியது தானே. அதைவிட்டு விட்டு புக் அட்டை போடுதல், களிமண்ணில் பொம்மை செய்தல் போன்ற பயிற்சிக்கு ஏன் வருகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமையை கொண்டாடும் குழந்தைகள் திங்கள் கிழமையை எவன் தான் கண்டு பிடித்தான் என்று முணங்குவதை கேட்டு இருக்கேன்.

பள்ளிக்கு போகாத பிள்ளைகளை அவர் தாய் வெலக்கமாத்தால் அடித்தே பள்ளி வரை கொண்டு வந்து விடுவதை பார்த்திக்கிறேன்.

கொடும கொடுமன்னு ஸ்கூலுக்கு போனா அங்க ஒரு கொடும குச்சியோட நிக்குது பையனுக்கு உசுரே போகுது உசுரே போகுதுனு அழைக்கிற மாதிரி இருக்கு

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது. வெளி அனுபவமும், திறமையும், இருந்தா அவன் வாழ்க்கை **Best**

இல்லைனா அவன் பள்ளி வாழ்க்கை **Waste**
ஒரு சின்ன கதை சொல்றேன் கேளுங்க

ஒரு பேராசிரியரும், படகோட்டியும் படகில் பயணம் செய்கின்றனர். பயணத்தின் போது பேராசிரியர் உனக்கு இயற்பியல் தெரியுமா? என்று கேட்டார். அதற்கு படகோட்டி தெரியாது என்று சொன்னார். பேராசிரியர் உன் வாழ்க்கையில் கால் பகுதியினை நீ இழந்து விட்டாய் என்று சொன்னார். வேதியியல் தெரியுமா? என்று கேட்டார். மறுபடியும் அவன் தெரியாது என்று சொல்ல 1/2 பகுதி வாழ்க்கை உனக்கு போனது என்று சொன்னார். பிறகு கப்பலில் ஓட்டை விழுந்தது. படகோட்டி ஐயா உங்களுக்கு நீந்த தெரியுமா? என்று கேட்டார். பேராசிரியர் தெரியாது என்றார். உனக்கு முழுவாழ்க்கையும் போனது என்றார் படகோட்டி.

பேராசிரியர் அவமானத்தால் தலை குனிந்தார்.

**A.ஷர்மிளா IX**

# கரும்பாலை முன்னேற தடையாக இருப்பவர்கள் இளைஞர்களே!

அன்னப்பறவை பாலையும், நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் குடித்து நீரை விட்டு செல்லும். ஆனா இப்ப உள்ள இளைஞர்கள் அப்படி இருக்கிறார்களா! இல்லை இப்ப உள்ள இளைஞர்கள் நல்லவற்றை நீக்கி விட்டு தீயவற்றை எல்லாம் எடுத்து கொள்கின்றனர். சமூக முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பது படிப்பறிவின்மை தான். படிப்பில்லாததால் தான் நாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தீய பழக்கங்களில் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். தம் வீட்டினருடன் சண்டையிட்டு காவல் நிலையம் வரை செல்கிறார்கள். அதனால் அங்கு கரும்பாலை என்றால் ஒரு மோசமான பகுதி என்று ஒரு முடிவு கட்டுகிறார்கள். ஒரு அண்ணன் பாஸ்போட்டுக்காக காவல் நிலையத்திற்கு சென்றார். அப்போது அவருக்கு மரியாதை இருந்தது. இவர் கரும்பாலை பகுதியை சேர்ந்தவர் என்று தெரிந்தவுடன் அந்த இடத்தில் மாற்றம் ஏற்பட்டது. அவருக்கு மரியாதை குறைந்தது. இந்நிலை மாற வேண்டும். நம் மதுரை சீடு இளைஞர்கள் தம் வேலையுடன் சேர்த்து சமூக சேவையும் செய்கிறார்கள். கரும்பாலையில் உள்ள மற்ற இளைஞர்களும் இணைந்தால் கரும்பாலையின் புகழ் உலகமெங்கும் பரவும்.

மணிப்பாண்டி IX

## பெரியவர்களே

இளைஞர்கள் கெடுவதற்கு பெற்றோர்கள் தான் காரணம் என குற்றம் சாட்டுகிறேன். இந்த சமூகம், இந்த கரும்பாலை கெட அடிப்படை காரணம் பெரியவர்களே

பெற்றோர்கள் செய்யும் பாவங்கள் பிள்ளைகளை சேர்கின்றன.

அப்பா குடிச்சிட்டு அம்மாவை அடிக்கிறாரு. பார்த்துட்டு பையன் கவலையில் குடிக்கிறான். பொண்ணு அன்பு, பாசம் கிடைக்காம காதல் பண்ணுது பிறகு படிப்பை கைவிட்டு கல்யாணம் பண்ணுது. பையன்களை 1000, 2000 ம்னு வேலைக்கு அனுப்புறாங்க. பின்பு பணத்துக்க ஆசைப் பட்டு படிப்ப முடிக்கிறாங்க. பெண் பிள்ளைகளை படிக்கவிடமா குடும்ப கௌரவத்தை காட்டி சீக்கிரமே கல்யாணம் முடிக்கிறாங்க. எப்படியும் குழந்தைகள் தான் இளைஞர்கள் ஆகி பெரியவர்கள் ஆகிறார்கள். நிறைய ஆசிரியர்கள் தாங்கள் உழைத்து மாணவர்களை முன்னேற்றாமல் பலரின் வாழ்க்கை கெடும் படி பெயிலாக்குகிறார்கள். பெயிலாக்கப்பட்ட மாணவர்கள் வழி தடுமாறு கிறார்கள். இப்பாவம் ஆசிரியர்களை சேரும். வெறும் 100% தேர்ச்சிக்காக மாணவர்களின் வாழ்க்கையில் ஆசிரியர்கள் விளையாடுகிறார்கள். படிப்பு படிப்பு 100% தேர்ச்சி என புலம்பும் ஆசிரியருக்கு சிரிச்சா பிடிக்காது, விளையாண்டா பிடிக்காது. பள்ளிபருவ மகிழ்ச்சியை சாகடிக்கும் ஆசிரியர்கள் ஓய்வுக்கு பிறகு மனநோயாளியாகி விடுவார்கள். சீடுக்கு போகாதே என்று கூறும் ஆசிரியருக்கு பதிலா அந்த டீச்சர்கிட்ட படிக்காதே என்று சொன்னால் என்ன ஆகும் இந்த டீச்சர்களால் சமூகம் பாழாகுது. சமூக முன்னேற்றம் தனி மனிதன் பிறகு, குடும்பம் பிறகு, சமூகம், நாடு, உலகம் என மாறினாலும் பெரியவர்கள் மோசமாக நடந்து சந்ததிகளை சாகடிக்கிறார்கள்.

வினோதினி VIII

## பாடல்

தன்ன ன ன ன தன்னன னா
கொக்கக் கோலா குடிடா –நீ
பாரீன் சீசா குடிடா
ரெண்டையும் நீ குடிச்சுப்புட்டு
அப்பலோல படுடா – நீ
அப்பலோல படுடா

எங்க நாட்டுக்குள்ளே வாரான்
என்னென்னமோ வித்துப் போறான்
என்னான்னு தெரியாம வாங்கி குடிக்கிறான்
பின்னாடி வாந்தி எடுக்கிறான்.
இளநீரு இருக்கு கரும்புசாறு இருக்கு
கம்பங்கூலு கேப்ப கூலு நல்லா இருக்குது
அத தான் குடிக்க மறுக்குறான்

## யாரு?

மலிவாக கிடைக்கும் காற்றே
உன்னை மாசுபடுத்தியது யாரு
பாதுகாக்கும் படலமே உன்னை
பழுதாக்கியது யாரு
தாராளமா கிடைக்கும் தண்ணீரே
உன்னை தரம் குறைத்தது யாரு

முருகபாண்டி

# கடம்பவனம் – இரு பயண அனுபவங்கள்:

ஓர் இனிய மாலைப் பொழுதில் இளைஞர்கள் மட்டும் அனுபவித்த கடம்பவன பயணம் இரவு 10.30 மணி வரை நீடித்தது.வானியல் சாஸ்திரம் சொன்னவரிடம் இளைஞர்கள் அரசு வேலை கிடைக்குமா காதல் திருமணம் நடக்குமா, சொந்த வீடு கட்ட முடியுமா, வெளிநாடு செல்வோமா, என கேட்டு அசத்தினர். ஜோசியம் சொன்னவர் 24 வயது ஜீன்ஸ் போட்ட நவநாகரிக இளைஞர் என்பது நம்மவர்களை சிந்திக்க வைத்தது.

கிளித்தட்டு, பல்லாங்குழி, பம்பரம், பரமபதம், கிட்டிபுள் விளையாடி சிறுவர்களாகி மகிழ்ந்த இளைஞர்களை கண்டு கார்த்திக் அண்ணன் மிகவும் பரவசமாக காட்சியளித்தார். அங்கிருந்த இளைஞர் அனைவரும் சிறு வயது முதலே கார்த்திக்கிடமிருந்து வளர்ந்தவர்கள்,

மலைகளுக்கு நடுவே திறந்த வெளி பொம்மலாட்டம், பிரம்மாண்டமான அரங்கத்தில் நடந்த கரகம், ஒயில், பரதம், புல்லாங்குழல் கச்சேரி என அனைத்தும் நம் மதுரை சீடு மக்களை கலா ரசிகர்களாக்கி விட்டது.

முருங்கைக்காய் சூப், நெல்லிப்பழ ரசம், போன்றவையுடன் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட ஆப்பம், பணியாரம், சுய்யம், இட்லி, ஊத்தப்பம், அவல், தயிர், சேமியா பாயாசம் என வகை வகையான உணவுகளை வயிறு இன்னும் கொஞ்சம் பெரிதாக இருக்கக்கூடாதா என்ற படி உண்டனர். அற்புதமான கடம்பவன பயணத்திற்காக மதுரை சீடுக்கும் அனுபவங்களை எழுத்தாக்க வாய்ப்பளித்த புதுயுகத்திற்கும் நன்றி..

C.அருண்குமார்.

மதுரையின் பழைய பெயர்களில் கடம்பவனம் என்பதும் ஒன்று. அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகள், பிற மாநிலத்தவர், தம் இன பாரம்பரியத்தை நினைவூட்டிக் கொள்ளும் தமிழர் என அனைவரையும் வரவேற்கும் கடம்பவனம் சென்றோம். செலவு பெரிது எனினும் நற்காரியங்கள் ஆற்றுவது மதுரை சீடு-ன் சிறப்பான நோக்கமல்லவா. 60 பேர் கொண்ட குழுவாக கரும்பாலையிலிருந்து சொக்கிகுளம் வரை நடைபயின்று அங்கு நமக்காக ஏற்பாடு செய்திருந்த வாகனத்தில் மகிழ்ச்சி புரண்டோட, சிரித்து மகிழ்ந்து பயணப்பட்டோம். கிராமத்து நெஞ்சங்களை சுமந்து செல்லும் அந்த தட பேருந்து நம் வானரங்களின் அரைமணி நேர அலப்பறையால் மகிழ்ந்து, சோகமாய் எங்களை பரளியில் இறக்கிவிட்டது. பரளி திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தது. மதுரையிலிருந்து 25கி.மீ தொலைவில் உள்ளது. இயற்கை அதிக வெப்பம் தராமல் தாலாட்ட பரளியிலிருந்து 1கி.மீ தொலைவில் கடம்பவனம் என்ற இடத்திற்கு சென்றோம். நாலாபுறமும் மலை சூழ்ந்திருக்க தூரத்து சமவெளி வயல்கள் தெரிய பச்சை பசேலென்ற பகுதியில் கடம்பவனம் காட்சியளித்தது. தமிழ் பண்பாட்டுத் திருத்தலமான கடம்பவனத்தில் நவீனமும், பழமையை நினைவூட்டும் சங்கதிகளும் நிறைந்து காணப்பட்டன. கலாச்சாரங்களை நினைவூட்டும் வகையில் இலக்கியங்களை பிரதிபலிக்கும் வண்ண ஓவியங்கள், கிராமப்புற தெய்வங்கள், பெருந்தெய்வங்கள் நிறுவப்பட்டிருந்தன. சிலர் வணங்கினர், சிலர் பார்வையிட்டனர், சிலர் அதன் பின்னணியை ஆராய்ந்தனர், தங்குமிடங்களை பார்வையிட்டோம். கடம்பவனத்தின் மேலாளர் கோபாலசாமி தமிழ் கலாச்சாரத்தின் பல்வேறு கூறுகளை படம்பிடித்துக் காட்டும் தங்களது பணிகளை விவரித்துப் பேசினார். பிரம்மாண்டமான அரங்கத்தில் இடது, வலது புறங்களில் மலைகள் ரசித்தபடி கேட்டுவிட்டு, மதிய உணவை அங்கேயே முடித்துக் கொண்டு கடம்பவனத்தை பிரிய மனமில்லாமல் வீடு வந்து சேர்ந்தோம்.

தமிழ்ச்செல்வி
கடம்பவனம்
பயணக்குழு

# பாராட்டுகின்றோம்

**மதுரை சீடுக்கு விருது:-**

சென்னையைச் சேர்ந்த தேசிய ஒருமைப் பண்பாட்டுக் கழகம் மதுரை சீடுன் சமூகப் பணிகளை பாராட்டி விருது மற்றும் தங்க பதக்கம் வழங்கியது. சென்னை ஜெர்மன் ஹாலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு மகளிர் உரிமை ஆணையத்தின் தலைவர் சற்குணபாண்டியன், சிறுசேமிப்பு வாரிய தலைவர் ரகுமான்கான் அவர்களிடமிருந்து நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி விருதினைப் பெற்றுக் கொண்டார்.

**K.L.N. சாரநாத்**

சாரநாத் பத்தாம் வகுப்பில் 500க்கு 475 மதிப்பெண்கள் எடுத்தார். நம் கரும்பாலை குழந்தைகள் அதிகம் பயிலும் செங்குந்தர் பள்ளியில் படித்தவர். பள்ளியிலே இரண்டாம் இடம் பிடித்தவர். இவர் தாழ்த்தப்பட்ட மாணவர்களில் அதிக மதிப்பெண் பெற்றமைக்காக மதுரை மாவட்ட நிர்வாகத்தால் அழைக்கப்பட்டு கலெக்டர் அலுவலகத்தில் பரிசளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.

**பரிசுகளை அள்ளிய மதுரை சீடு குழந்தைகள்:-**

காமராஜர் பிறந்தநாளையொட்டி கரும்பாலை பொது மக்களும், பள்ளிகளும் கொண்டாடிய கல்வி விழிப்புணர்வு நாள் விழாவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பாட்டுப்போட்டி, ஓவியப்போட்டி, விளையாட்டு போட்டிகளில் பெரும்பாலான மதுரை சீடு குழந்தைகள் கலந்து கொண்டு வென்றனர். வீரலெட்சுமி, விந்தியா, முத்துலெட்சுமி (VI), செல்வம் (VIII), ஜென்ஸி, தமிழ்ச்செல்வி, கார்த்திக் (IX), ஆகியோர் வெற்றி பெற்று பரிசுகளை அள்ளி வந்தனர்.

ஸ்டீபன் (VII) பிரமிடு உருவாக்கும் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார். மணி (VI) கராத்தே போட்டியில் மூன்றாமிடம் பெற்றார்.



# குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்

**கல்வி விழிப்புணர்வு திருவிழா :-**

1.6.2010 அன்று 1 முதல் 12 ஆம் வகுப்பு (11 ஆம் வகுப்பு தவிர) குழந்தைகளுக்கான பள்ளிகள் தொடங்கியதையொட்டி வாழ்த்தும் வகையிலும் குழந்தைகளை ஊக்குவிக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வகையிலும் கரும்பாலை, இந்திராநகர், காலனி பகுதிகளில் உள்ள 5 நுழைவு வாயில்களிலும் பள்ளிக்கு அனுப்பும் விழா நடைபெற்றது.

**பள்ளி சேர்க்கைக்கு உதவுதல்:**

ஆறாம் வகுப்பு குழந்தைகள் 5 பேருக்கும், 11 ஆம் குழந்தைகள் 16 பேருக்கும் பள்ளி சேர்க்கைக்கு வேண்டிய உதவிகள், வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் மதுரை சீடு குழந்தைகள் 23 பேர் முதல் தலைமுறையில் மேல்நிலைக்கல்வி பயில்பவர்கள்.

**11ஆம் வகுப்பினருக்கு பள்ளி துவக்கம்:-**

17.6.2010 தேதியன்று பள்ளிகள் துவங்கின. தியாகராஜர், இளங்கோ, காக்கைப்பாடினியார், ஓ.சி.பி.எம், சௌராஷ்டிரா, அமெரிக்கன் கல்லூரி, போன்ற மேல்நிலைப் பள்ளிகளில் குழந்தைகள் இவ்வாண்டு இணைந்துள்ளனர்.

**கல்வி உதவித்தொகை:-**

இந்த கல்வியாண்டின் தொடக்கத்தில் 15.7.2010 அன்று ஆண் குழந்தைகள் 12 பேருக்கும், பெண் குழந்தைகள் 21பேருக்கும் சேர்த்து மொத்தம் 33 குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன.

**தேன்கூடு குழந்தைகள் வங்கி:-**

6.6.2010 அன்று 2009 - 2010 ஆம் ஆண்டின் குழந்தைகளின் சேமிப்பு மற்றும் வட்டி ரூ. 24314 பிரித்து வழங்கப்பட்டது.

***சேமிப்பில் வகுப்பு வாரியாக சிறப்பிடம் பெற்றவர்கள்***

முதலிடம் - XI- ரூ. 3750
இரண்டாமிடம் - XII - ரூ. 3465
மூன்றாமிடம் - VIII - ரூ. 3305

***அரங்கம் வாரியாக சிறப்பிடம் பெற்றவர்கள்:***

முதலிடம் - கனவுகள் - ரூ. 9647
இரண்டாமிடம் - வேர்கள் - ரூ. 9185
மூன்றாமிடம் - வாண்டுகள் - ரூ. 1678

***தனிநபர் சேமிப்பில் சிறப்பிடம்***

முதலிடம் - K.ஆனந்த் (VII) - ரூ. 1841
இரண்டாமிடம் - S.நாகலெட்சுமி (XII) - ரூ. 1110
மூன்றாமிடம் - D.சுரேஷ்கண்ணன் (VIII) - ரூ. 1079

**புதுயுகம் இதழ்:-**

ஏப்ரல் மே 2010 (பணிமடல் -15) புதுயுகம் இதழ் 500 அச்சிடப்பட்டு குழந்தைகளிடையே வழங்கப்பட்டன.

**தேர்தல்:-**

16.6.2010 அன்று 12ஆவது குழந்தைகள் மாமன்ற தேர்தல் நடைபெற்றது. 17 ஜூன் அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. ஜூன் 18 அன்று வெற்றியாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

12 அவது MSCF பொறுப்பாளர்கள்:-

தலைவர்கள்: P.மகேஸ்வரி (XII), P.ராம்கி (X)
கனவுகள் அரங்க பிரதிநிதி : S.நாகூர்ராஜா, S.ஜனனி
வேர்கள் அரங்க பிரதிநிதி: D.விக்னேஷ்வரன், R.வினோதினி
வாண்டுகள் அரங்க பிரதிநிதி: A.ஜெர்க், V.பவானி
கமலாநகர் அரங்க பிரதிநிதி: S.மதன், S.செல்வக்கனி

**குழந்தைகளுக்கான சிறப்பு ஆங்கில வகுப்புகள்:-**

ஜுன் 28,30 மற்றும் ஜுலை 5,8,20,21,26,29 ஆகிய எட்டு நாட்கள் மாலை நேரங்களில் ஆங்கில வகுப்புகள், Story telling, Word Puzzles, Geography வகுப்பு போன்றவற்றை விக்டோரியா, விக்டர், கிறிஸ்டினா ஆகிய அமெரிக்க ஆராய்ச்சி மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பு குழந்தைகளுக்காக வழங்கினர்.

**ஒரு நாள் பயிற்சி**

| தேதி | அரங்கம் | கருத்தாளர் | பயிற்சி |
|---|---|---|---|
| 12.6.2010 | வாண்டுகள் அரங்கம் | இராதாகிருஷ்ணன் | கதைகூறல் |
| 12.6.2010 | வேர்கள் அரங்கம் | | பெயிண்டிங் |
| 13.6.2010 | கனவுகள் அரங்கம் | | பெயிண்டிங் |
| 10.7.2010 | வாண்டுகள் அரங்கம் | R.பாஸ்கர்ராஜா<br>P.மணிகண்டன் | நடனம் |
| | வேர்கள் அரங்கம் | இராதாகிருஷ்ணன்<br>(TVS SChool) | பல்குரல் மற்றும்<br>குரல்வளப் பயிற்சி |
| | கனவுகள் அரங்கம் | P.இராதாகிருஷ்ணன் | பாடல் |
| 17.7.2010:- | வாண்டுகள் அரங்கம் | P.இராதாகிருஷ்ணன் | காய்கறிகளில்<br>கலை வண்ணம் |
| | வேர்கள் அரங்கம் | O.மோகன் | கரகாட்டம் |
| | கனவுகள் அரங்கம் | திருமிகு.நாகராஜன் | அழகான கையெழுத்து |

**பயிற்சி பட்டறை :-**

| | | | |
|---|---|---|---|
| 19.6.2010 | வாண்டுகள் அரங்கம் | துணைப்பேராசிரியர்கள்<br>Mrs.விமலா | யோகம்<br>எளிய |
| 20.6.2010 | வேர்கள் அரங்கம் | Mrs.ரமணி<br>அறிவுத்திருக்கோவில் | உடற்பயிற்சிகள் |
| | கனவுகள் அரங்கம் | மதுரை மனவளக்கலை மன்றம் | |

**ஞாயிறு வகுப்புகள்: -**

1.7.2010: வேர்கள் மற்றும் கனவுகள் அரங்க குழந்தைகளுக்கான விடுமுறை நாள் சிறப்பு வகுப்பினை திரு. ராஜா வழிநடத்தினார்.

25.7.2010: காலை - மாதாந்திர தேர்வுகளுக்கான தயாரிப்பில் உதவுதல்
மதியம்- உள்ளரங்க விளையாட்டுகள்
மாலை - தேர்வுக்கான தயாரிப்பில் உதவுதல்.

**சுற்றுலா பார்வையிடல்கள்:-**

27.6.2010 : மடப்புறம் காளியம்மன் கோயில் பார்வையிடல் வரலாறு, வழிப்பாட்டு முறைகளை கேட்டறிதல்.

11.7.2010: பரளி கடம்பவனத்திற்கு சென்று குழந்தைகள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். மேலாளர் திருமிகு. கோபாலசாமி இந்நிகழ்ச்சிக்கு உதவினார்.

## இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள்:-

**தொலைபேசி வழி ஆங்கில வகுப்புகள்:-**

ஜுன் 2010:- 3,4,10,11,12,13,14,16,17,18,22,28,29
ஜுலை 2010 1,2,3,6,9,12,13,15,16,23,24,26,27

ஆகிய 26 நாட்கள் மாலை நேரங்களில் நடைபெற்ற தொலைபேசி வழி ஆங்கில வகுப்புகளை ஸ்ரீரங்கம் சமூக ஆர்வலர் திருமதி. பாலாம்பிகை Essay & Letter Writing, Verbs, Types of sentences, Framing questions, book reading, Jumble sentences, Pronouns, Degrees of Comparison, Gender, Singular & Plural, Articles தலைப்புகளில் வகுப்புகள் எடுத்தார். இவ்வகுப்புகளில் 4 கல்லூரி மாணவிகள், M.தங்கலெட்சுமி, K.முத்துமாரி, S.நாகலெட்சுமி, P.அஷ்டலெட்சுமி, ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்வாண்டு மதுரை சீடு இளைஞர்களில் மூவர் மட்டுமே கல்லூரி கல்வியுடன் மதுரை சீடு நடவடிக்கைகளில் பங்கேற்க விருப்பம் தெரிவித்தனர். மற்றவர்கள் தொடர்ந்து கல்லூரி கல்வி மற்றும் தொழிற்கல்வி படிப்புகளில் பெற்றோர் துணையுடன் இணைந்துள்ளனர். இவ்வகையான சுயசார்பு நிலையை இவ்வாண்டு முதல் மதுரை சீடு ஊக்குவிக்க தொடங்கியுள்ளது. கல்லூரி முதலாமாண்டு இணைந்திட விண்ணப்பங்கள் நிரப்புதல் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. K.முத்துமாரி, S.நாகலெட்சுமி, இருவரும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரியில் இளங்கலை ஆங்கில வகுப்பில் இணைந்துள்ளனர். இருவரும் முதல் தலைமுறையில் கல்லூரி செல்லும் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர்கள் மதுரை சீடு உதவியுடன் ஆசிரியர் பட்டபடிப்புகளில் இணைந்திட முயற்சித்தனர். M.அமுதா, S.இளவரசி, இருவரும் நல்லமணி, ஆறுமுகம் யாதவர் கல்லூரியிலும், P.முனியசாமி கே.எல்.என் கல்லூரியிலும் இணைந்துள்ளனர். P.சரண்யதேவி பி.எட் அரசு அனுமதி சேர்க்கைக்காக காத்திருக்கிறார். S.முருகபாண்டி, N.ராமச்சந்திரன், இருவரும் மதுரைக்கல்லூரி முதுகலை சமூகவியல் படிப்பில் இணைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் முதல் தலைமுறையில் கல்லூரிக் கல்வி பயில்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**அரசுப் பணியாளர் தேர்வுகளுக்கு முன் தயாரிப்புப் பணிகள்**

இராமச்சந்திரன், முருகபாண்டி, மாரிமுத்து, சுரேஷ்ராஜன், ஆகியோர் அரசு இரண்டாம் நிலை காவலர் பணிக்கு விண்ணப்பித்து உரிய குழு விவாதங்கள், தேர்வுக்குரிய தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். இவர்கள் கரும்பாலையில் உள்ள பிற இளைஞர்கள் விண்ணப்பித்தலுக்கு உரிய உதவிகளை வழங்கினர்.

தமிழக அரசு VAO தேர்விற்கு இளைஞர்கள் தயாராகி வருகின்றனர். மதுரைசீடு இளைஞர்கள் உட்பட இயக்குநர் மன்சூர் சுமார் 15 பேருக்கு விண்ணப்பங்கள் நிரப்புவது மற்றும் உரிய வழிகாட்டல்கள் வழங்கினர்.

**பணி வாய்ப்புகள்:-**

கடந்த ஆண்டு படிப்பினை முடித்த இளைஞர்கள் சுல்தான் அலாவுதீன், பெரியசாமி, விஜய் போன்றோர் கௌரவமான தனியார் பணிகளில் இணைந்துள்ளனர்.

**புதிய வெளிச்சங்கள்:-**

2010 ஏப்ரல், மே, ஜுன், ஜுலை க்கான புதிய வெளிச்சங்கள் தனிச்சுற்று இதழ் அச்சடிக்கப்பட்டு இளைஞர்கள் மாணவிகள், பெற்றோர், பள்ளி ஆசிரியர்களுக்கு 30.6.2010 அன்று வழங்கப்பட்டன.

**MSYF தேர்தல்:-**

16.6.2010 அன்று இளைஞர்கள் பேரவை தேர்தல் நடைபெற்றது. தலைவர்களாக தங்கலெட்சுமி மற்றும் அழகிரி தேர்ந்தெடுக்கப்பட்டனர் 17.6.2010 அன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 18.6.2010 அன்று பொறுப்பேற்றுக் கொண்டனர். தேர்தல் ஆணையராக முன்னாள் மதுரை சீடு பயனாளி பிரேம்குமார் பொறுப்பேற்றிருந்தார்.

**சுற்றுலா:-**

18.7.2010 அன்று திண்டுக்கல் பரளியிலுள்ள கடம்பவனம் என்ற பகுதியினை மதுரை சீடு இளைஞர்கள் பார்வையிட்டும், கலைநிகழ்ச்சிகளை ரசித்தும் பாரம்பரிய இரவு உணவு உண்டும் மகிழ்ந்தனர்.

**கருத்தரங்குகள்:-**

7.6.2010 அன்று கல்லூரி இளைஞர்களுக்கான கல்வி கருத்தரங்கை நிர்வாக அறங்காவலர், கார்த்திக்பாரதி வழிநடத்தினார்.

26.6.2010 அன்று கற்பித்தலுக்கான கருவிகள் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கை சிநேகம் இயக்குநர் முத்துக்குமார் வழிநடத்தினார்.

17.7.2010 அன்று TVS பள்ளி தமிழாசிரியர் திருமிகு.கதிரவன் தோல்வியை கேள்விகேள் என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான கருத்தரங்கை வழிநடத்தினார்.

**ஆசிரியத் தொண்டர்கள்:-**

மதுரை சீடு மாலைநேர இணைக் கல்வி அரங்கங்களில் ஆசிரியர்களாகவும், விடுமுறைநாள் செய்பாடுகளிலும், தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தினசரி மாலை 5.30 மணி முதல் 9.00 மணி வரையிலும் விடுமுறை நாட்களிலும் மதுரை சீடு நடவடிக்கைகளில் தொண்டர்கள் உதவி புரிகின்றனர்.

**பழகுநர் உரிமம்:-**

2.7.2010 அன்று 4 இளைஞர்களுக்கு பழகுநர் உரிமம் பெற மதுரை சீடு ஆல் உதவிகள் வழங்கப்பட்டன.

**முன்னாள் மதுரை சீடு பயனாளிகள் அமைப்பு:-**

5.7.2010: அன்று மதுரை சீடு - இன் 11 ஆண்டு நிறைவில் சுமார் 7 உறுப்பினர்களுடன் சுல்தான் அலாவுதீன் பொறுப்பில் தொடங்கப்பட்டது.

**கல்வி உதவித்தொகைகள்:-**

ஜூன் மாதத்தில் சுகன்யாதேவி, தங்கலெட்சுமி, முத்துமாரி, நாகலெட்சுமி, கற்பகஜோதி ஆகிய ஐவருக்கும் 14.7.2010 அன்று மணிகண்டன, மோகன், மாரிமுத்து, சிவகுரு, அருண்குமார், போன்றோருக்கு கல்லூரிக் கட்டணத்திற்குரிய உதவிகள் வழங்கப்பட்டன.

**இளைஞர் வங்கி:-**

16.6.2010 ஆம் தேதி 3 பேர் வீதம் 10 குழுக்காக 30 பேர் கொண்ட இளைஞர் சேமிப்பு வங்கி துவங்கியது. ஜூன் மாதத்திற்குரிய சேமிப்பினை முருகபாண்டி, முனியசாமி, ராமச்சந்திரன், ஆகியோர் பெற்றனர். ஜூலை மாதத்திற்குரிய சேமிப்பினை மணிகண்டன், அமுதா,சரண்யா, ஆகியோர் பெற்றனர்.

## மன்ற நடவடிக்கைகள்

| மன்றம் | தேதி | பயனடைந்த குழந்தைகள் | பயனடைந்த இளைஞர்கள் | பயனடைந்த மக்கள் |
|---|---|---|---|---|
| இதழியல் மன்றம் | | | | |
| புதுயுகம் விநியோகம் 1. | 14.6.10 15.6.10 | 140 | 30 | 90 |
| புதிய வெளிச்சங்கள் விநியோகம் | 30.6.10 | 40 | 30 | 130 |
| புதுயுகம் படைப்பரங்க வகுப்பு | 13.6.10 | 90 | - | - |
| வான்முகில் கலைமன்றம் | | | | |
| அங்காடித்தெரு - திரையரங்கிற்கு சென்று பார்த்தல் | 14.6.10 | - | 25 | - |
| இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் திரையிடல் | 19.6.10 | 55 | 25 | - |
| விளையாட்டு மன்றம் | | | | |
| உள்ளரங்க/வெளியரங்க விளையாட்டுகள் | 19.6.10 | 60 | 15 | - |

**நூலக மன்றம்:-**

24.6.10 அன்று செந்தமிழ் நூலகம் சார்பில் இன்றைய சூழலில் பள்ளி செல்வது கசப்பே! கற்கண்டே! என்ற தலைப்பிலும் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பது பெரியவர்களே! இளைஞர்களே என்ற தலைப்பிலும் விவாத அரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக விக்டோரியா கலந்து கொண்டார்.

**பெற்றோர்கள் கூட்டம்:-**

29.6.1 அன்று அன்னையர் கூட்டம் தொண்டர் சரண்யா பொறுப்பில் நடைபெற்றது.
30.7.10 அன்று அன்னையர் கூட்டம் இயக்குநர் மன்சூர் அலி பொறுப்பில் நடைபெற்றது.
28.6.10 அன்று தந்தையர் கூட்டம் தொண்டர் முருகபாண்டியின் பொறுப்பில் நடைபெற்றது.
30.7.10 அன்று தந்தையர் கூட்டம் தொண்டர் மோகனின் பொறுப்பில் நடைபெற்றது.

**பன்னாட்டு பார்வையிடுகள்:-**


28.6.10, 30.6.10:- ஆகிய தினங்களில் மதுரை சீடு மையங்களை விக்டோரியா, விக்டர், கிறிஸ்டினா, ஆகிய அமெரிக்க மாணவர்கள் பார்வையிட்டனர்.

31.7.10:- அன்று **Nic, Monia, Claudia, Beat** (சுவிட்சர்லாந்து) மதுரை சீடு கல்வி மையங்களை பார்வையிட்டனர்.

**மதுரை சீடுக்கு விருது:-**

சென்னையைச் சேர்ந்த தேசிய ஒருமைப் பண்பாட்டுக் கழகம் மதுரை சீடு -இன் சமூகப் பணிகளை பாராட்டி விருது மற்றும் தங்க பதக்கம் வழங்கியது. சென்னை ஜெர்மன் ஹாலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு மகளிர் உரிமை ஆணையத்தின் தலைவர் சற்குணபாண்டியன், சிறுசேமிப்பு வாரிய தலைவர் ரகுமான்கான் அவர்களிடமிருந்து நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி விருதினைப் பெற்றுக் கொண்டார்.

# ஓவிய வெள்ளம்



B.பாரத்
II




P.புவனேஸ்வரன்



K..பார்வதி
XII C



R..வினோதினி
VIII




M.மணிகண்டன்
VII B






D..விக்னேஸ்வரன்
VIII



R..முத்துலெட்சுமி
VII